Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 563/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | மரகதம், சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 06th March 2026.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 1 to 3 present. Accused counsel present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது நெகமம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் பணியாற்றிய காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் மற்றும் காவல் உதவி கண்காணிப்பாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களையும் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 18.06.2018 ம் தேதி மேற்படி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் நிலைய அலுவலில் இருந்தபோது, பொள்ளாச்சி பிரபு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற இண்டிமேசனைப் பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக கிச்சையில் இருந்த ராஜேந்திரன் மனைவி வள்ளியம்மாள் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலையக்குற்ற எண்.170/2018, சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 354, 506(1) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** மற்றும் முதல் தகவலறிக்கை **அசாஆ.2** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக காவல் உதவி கண்காணிப்பாளர் அவர்கள் பார்வைக்கு வைத்ததை அவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே 17.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் விஜயன் மற்றும் நடராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே பார்வை மகஜர் **அசாஆ.3**, மாதிரி வரைபடம் **அசாஆ.4** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் வழக்கில் காயம்பட்ட வள்ளியம்மாள் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஞானசுந்தர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவர் அளித்த காயச்சான்றிதழை பெற்றுள்ளார். அந்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் சம்பவயிடத்திலிருந்து கையடக்க கருங்கல் ஒன்றை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.7** ஆகும்.

பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் மாண்புமிகு கோயமுத்தூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இத்துடன் அவரது புலன்

விசாரணையை முடித்து எதிரிக்கெதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், கைப்பற்றப்பட்ட பொருள்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமில்லையென்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi